# காஞ்சிபுரம் மாவட்டம்

## மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பில் 45 மாற்றுத் திறனாளிகளுக்கு சுயதொழில் தொடங்க ரூபாய் 4,50,000 மானியத்தை மாவட்ட ஆட்சியர் திரு. பா. பொன்னையா, இ.ஆ.ப., வழங்கினார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் சுயமாக தொழில் தொடங்க வங்கிக் கடனுதவியுடன் கூடிய மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இன்று 16.04.2018 பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் வங்கி கடன் மானிய திட்டத்தின் கீழ் சுயதொழில் புரியும் 45 மாற்றுத் திறனாளிகளுக்கு தலா ரூ.10,000 வீதம் மானியமாக ரூபாய் 4,50,000 த்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பா. பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம், செங்கல்பட்டு சார்பில் வழங்கப்பட்ட மானியத்துடன் கூடிய வங்கி கடன் வழங்கும் திட்டத்தில் மாற்றுத் திறாளிகள் சுயமாக தொழில் புரியும் வகையில், செல்போன் சர்வீஸ் செய்தல். ஜெராக்ஸ் கடை, பெட்டிக் கடை, சிற்றுண்டி கடை, துணி வியாபாரம், கறவை மாடு, புத்தக வியாபரம் உள்ளிட்ட பல்வேறு தொழில்கள் புரியவுள்ளனர். சுயதொழில் கடனுதவி பெற்ற மாற்றுத் திறனாளிகள் நல்லமுறையில் தொழில் தொடங்கி பொருளாதாரத்தில் முன்னேற்றமடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

2018-2019ம் நிதியாண்டு முதல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் மாற்றுத் திறனாளிகள் சுய தொழில் வங்கி கடன் மானியம் வழங்கும் திட்டம் ரூ.10,000 லிருந்து ரூ.25,000 ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆடட்சித் தலைவர் திரு. பா. பொன்னையா, இ,ஆ.ப., மாவட்ட மாற்றுத் திறாளிகள் நல அலுவலர், திரு.ய.தே. ஸ்ரீநாத், பேச்சுப் பயிற்சியாளர் திரு. பிரபாகரன், திரு. பாஸ்கரன், உதவியாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.